**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| O.S. No. 277/2014 | Date : 20.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: மதியழகன் | S/o. அபிமன்னன் | |
| Evidence Recorded Time: 04.41 P.M. to 05.45 P.M | | |

**<u>3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>**

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 07.11.2013 ல் நான் அனுப்பிய அறிவிப்பில் பாரா எண்.1-ல் தங்கராஜ் இறந்துவிட்டார் என்று அருடைய மனைவி பூங்கொடிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியாக நினைவில்லை. அறிவிப்பில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் நினைவில்லை. நான் சொல்லிதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும், அந்த அறிவிப்பில் என் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், தற்போது இந்த வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பில் பத்தில் 3-ல் ரத்து செய்யப்பட்ட பவர் பத்திரத்தை பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த அறிவிப்பை நான் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் 2 வது பத்தியில் ரூபாய் ஐந்து லட்சத்தில் நான்கு லட்சத்தை 7ம் நபரான சேட்டு என்பவர் பெற்றுக்கொண்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அதில் 1 முதல் 6 நபர்கள் இந்த வழக்கில் 2 முதல் 8 பிரதிவாதிகளும் பெற்றுக்கொண்டதாக அறிவிப்பில் எந்த வித குறிப்பும் இல்லை என்றால் அந்த அறிவிப்பை நான் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.1-ல் பத்தி 4 ல் இரண்டு வாரம் கால அவகாசத்தில் பத்திர பதிவு செய்து கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. சென்ற வாய்தாவில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் கையொப்பம் உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளேன், அதன் பிறகாகவது அந்த அறிவிப்பை வழக்கறிஞர் மூலம் படித்து பார்த்தேனா என்றால் அதுபற்றி நான் கேட்கவில்லை. சாட்சி தற்போது அதில் நான் கையெழுத்து போடவில்லை என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்பதை பரிசோதிக்க நீதிமன்றத்தின் மூலமாக பரிசோதனைக்கு அனுப்ப தயாரகா உள்ளேனா என்றால் உள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள

கையொப்பத்தை ஒப்புக்கொண்டு, வழக்கறிஞர் மூலம் அனுப்பியதையும் ஒப்புக்கொண்டு தற்போது அந்த ஆவணம் எனக்கு எதிராக இருப்பதால் அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது அல்ல என்றம், அறிவிப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே 18.12.2012–லேயே பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்ட பிறகு 11 மாதங்கள் கழித்துதான் பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான், வில்லங்கம் போட்டு தெரியவந்தது அதனால் அனுப்பினேன். 18.12.2012–ல் பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்ட பின்பு வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்கள் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பழனிசாமி வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பை பற்றி வழக்கறிஞர் கவிதா அனுப்பிய அறிவிப்பில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் நான் அப்படி எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை, அதனால் குறிப்பிடவில்லை. பவர் பத்திரம் ரத்து பற்றி முதல் அறிவிப்பில் சொல்லிவிட்டு, இரண்டாவது அறிவிப்பில் பவர் பத்திரம் ரத்து பற்றி சொல்லவில்லை என்றால் 17.11.2014–ல் தான் வில்லங்கம் போட்டு பார்த்தேன், அப்போதுதான் பவர் ரத்தானது எனக்கு தெரியவந்தது. மேற்படி சங்கதியை நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், பி.வா.சா.ஆ.1 அறிவிப்பில் பவர் பத்திரம் ரத்து பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தங்கராஜ் எப்போது இறந்தார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தேதி சரியாக நினைவில்லை. தங்கராஜ் 20.01.2013–ல் இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தங்கராஜ் இறந்ததை பற்றி சொல்லி அவருடைய மனைவிக்கு அறிவிப்பு அனுப்பிவிட்டு வா.சா.ஆ.4–ல் மீண்டும் தங்கராஜ் பெயருக்கே அறிவிப்பு மீண்டும் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே தங்கராஜ் இறந்தது தெரிந்தும் வா.சா.ஆ.4 அறிவிப்பை அனுப்பி துர்லாபம் அடைய வழக்கிற்காகவும், வழக்கு மூலத்திற்காகவும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் பணம் கொடுத்து ஒப்பந்தம் போட்டிருந்தால் நான் சுத்தமான கரங்களோடு நீதிமன்றத்தை அணுகியிருப்பேன் என்றாலும், பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு பற்றி குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல. மோசடி செய்து

உண்மைகளை மறைத்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. TN 30 X 5314 என்ற பதிவெண் கொண்ட வாகனம் என்னுடையதா என்றால் வண்டி எண் நினைவில்லை. நான் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ள வாகனம் என் நண்பனின் வாகனம். ஒவ்வொரு முறையும் நீதிமன்ற வாய்தாவிற்கு அந்த வாகனத்தில்தான் வருகிறேன் என்றால் அந்த வாகனத்திலும் வருவேன், என் ஸ்கூட்டியிலும் வருவேன். TN 30 X 5314 யாருடைய வாகனம் என்றால் அது சேட்டு வாகனம் ஆகும், அவரும் நானும் ஒன்றாக்ததான் நீதிமன்றத்திற்கு வருகிறோம் என்றால் இன்று மட்டும் தான் வந்தோம். சேட்டு எனக்கு உறவினரா என்றால் இல்லை. என் அம்மா வழியில் அவர் எனக்கு சித்தி மகன் என்றால் இல்லை. பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்று படித்து தெரிந்து கொண்டேனா என்றால் நினைவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகளை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. தாவா சொத்து அல்லாமல் வேறு சொத்துக்களை வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன், 2014-ம் ஆண்டிற்கு முன்பு வாங்கியுள்ளேன். நான் அடிக்கடி மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகம் செல்வேன் என்றால் 2014-ம் ஆண்டிற்கு முன்பு சொத்து வாங்கிய காலங்களில் சென்றேன். 1ம் பிரதிவாதி என் உறவினர் என்றாலும், அதனால்தான் இருவரும் ஒன்றாக வந்து செல்கிறோம் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி பெயர் தெரியுமா என்றால் தெரியும், அவர் பெயர் செல்வராஜ். இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி பெயர் சேகர் என்றால் பிரதிவாதிகள் அனைவர் பெயரும் தெரியும், அவர்கள் எந்த வரிசை எண்ணில் வருகிறது என்று தெரியாது. 4ம் பிரதிவாதி சேகர் என்னிடம் இரண்டு லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றாலும், அந்த கடனுக்கு ஈடாக நான் சொன்னதன் அடிப்படையில் சேட்டு பெயரில் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி இரண்டு லட்சத்திற்கு வட்டி தொடர்ச்சியாக 4ம் பிரதிவாதி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. சேகர் வாங்கிய இரண்டு லட்சத்தை வட்டியுடன் திரும்ப செலுத்த சேகர் என்னிடம் வந்தார் என்றும், அதனை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, நான் கடன் கொடுக்கவில்லை, வட்டியும் வாங்கவில்லை. நான் 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு முழு சொத்தையும் அபகரிக்கவேண்டும்

என்ற எண்ணத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் முழு சொத்திற்கும் ஆசைபடுவதை அறிந்துதான் தங்கராஜ் உயிருடன் இருந்த காலத்திலேயே சேட்டுவிற்கு கொடுத்த பவரை ரத்து செய்து விட்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் ஒப்பந்தத்தில் சொன்னது போல நான்கு லட்சம் பணம் சேட்டுவிடம் கொடுக்கவில்லை என்றாலும், அதனை 2 முதல் 6 பிரதிவாதிகள் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நானும் சேட்டுவும் உறவினர் என்பதால் போலியான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும் சரியல்ல. பணம் கொடுத்தற்காக 2 முதல் 6 பிரதிவாதிகள் சாட்சி கையெழுத்தாக கிரைய ஒப்பந்தத்தில் போட்டார்களா என்றால் இல்லை. என்னுடைய அறிவிப்பில் சேட்டுவிடம் பணம் கொடுத்தோம் அதை 2 முதல் 6 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் நினைவில்லை. மோசடியாக கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திய விவரம் தெரிந்து தான் அவ்வாறு ஏற்பட்ட ஒரு மாதத்திற்குள் பவர் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.8 ஆவணத்தில் சேட்டு என்பவர் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினால் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பவரை ரத்து செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பவர் ரத்து பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் வா.சா.ஆ.4 அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் 18.12.2012-ல் ரத்து செய்தார்கள், அது எனக்கு 2014-ல் தான் தெரிந்தது. எனக்கு பவர் ரத்து செய்யப்பட்டது தெரியும் என்றாலும், தங்கராஜ் இறந்தது தெரியும் என்றாலும், தெரிந்து தான் வா.சா.ஆ.4 அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரியல்ல. ரூபாய் இரண்டு லட்சம் கடனுக்கு இணையாகவும்(Collatral purpose) எழுதிக்கொடுக்கப்பட்டது என்றும், என்னிடம் இருந்தோ, 1ம் பிரதிவாதியிடமிருந்தோ 2 முதல் 6 பிரதிவாதிகள் எந்த தொகையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நான் மோசடியாக சட்டப்படி செல்லதகாத ஒரு கிரைய ஒப்பந்தத்தை பயன்படுத்தி துர்லாபம் அடைவதற்கும், சொத்தை அபகரிப்பதற்கும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தங்கராஜ் இறந்துவிட்டதால் என்ன செய்வதென்று தெரியாமல் வா.சா.ஆ.4 அறிவிப்பை வழக்கிற்காக தயார் செய்து அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தானது கமலாவின் தனிப்பட்ட சொத்து

என்றாலும் 4ம் பிரதிவாதி வாங்கிய கடனுக்கு இணையாக எழுதிக்கொடுக்கப்பட்டதால், அந்த சொத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக 1ம் பிரதிவாதி என்னோடு கூட்டு சேர்ந்து அபகரிக்க முயற்சி செய்ததால் 1ம் பிரதிவாதி மீது நம்பிக்கை இழந்த காரணத்தினால் வா.சா.ஆ.8 ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. அதன் பின்பு எட்டு மாதங்கள் கழித்து 8ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, உரிமை உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணம் செல்லாது என்றாலும், அதன் மூலம் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு 2 முதல் 8 பிரதிவாதிகளின் சொத்தை அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் துர்லாபம் அடைய வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 அறிவிப்பை ஏற்கனவே தங்கராஜ் இறந்தது தெரிந்தும் வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்றும் விதமாக பி.வா.சா.ஆ–1 ஆவணத்தை ஏற்படுத்திவிட்டு பின்பு அதை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லப்பட்டது போல எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல, பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினேன். முதல் விசாரணையில் 7ம் பத்தியில் சொல்லியுள்ளது போல எந்த தேதியில் பஞ்சாயத்து பேசினேன் என்றால் தேதி நினைவில்லை, பலமுறை கேட்டேன், நாட்களை கடத்திவிட்டார்கள். நான் அவ்வாறு கேட்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தவர் இறந்துவிட்டால் அந்த பவரே ரத்தாகிவிடும் என்றால் சரியல்ல. அவ்வாறு செல்லாத பவர் பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் ஆனது சட்டப்படி செல்ல தக்கது அல்ல என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து நான் மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கூட்டு சதி செய்த தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கிடைக்க கூடியது

அல்ல என்றாலும் வா.சா.ஆ.3 செல்லாத ஆவணம் என்பதால் அது 2 முதல் 8 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், அதனால் 2 முதல் 8 பிரதிவாதிகள் செலவு தொகையோடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. 9ம் பிரதிவாதி சட்டப்படி பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்துள்ளார் என்றும், 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்க முழு உரிமை உள்ளது என்பதால்தான் 9 ம் பிரதிவாதி அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை சட்டப்படி பதிவு செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(9, 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.